**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8075208

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம் : சேலம் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year ஆண்டு: 2020 FIR No. மு.த.அ. எண்: 10/AC/2020 Date: நாள் 14.11.2020.

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: Criminal Procedure Code. Sections பிரிவுகள்: 102
(iii) Act சட்டம்: – Sections பிரிவுகள்: –
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 13.11.2020 13.00 மணிக்கு Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.11.2020 Time நேரம் 13.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 13.11.2020 Time நேரம் 13.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக ரகசிய தகவலின் பேரில்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 13 கி.மீ தொலைவில் கிழக்கே.
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மாவட்ட மேலாளர் / துணை ஆட்சியர் அலுவலகம், சித்தியூர் ஆட்டையாம்பட்டி, சேலம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. சந்திரமௌலி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. சந்திரன்.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியர் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் துணை காவல் கண்காணிப்பாளர் (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு சேலம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திரு D. அம்பாயிரநாதன், த/பெ. தியாகராஜன், மாவட்ட மேலாளர், TASMAC, சித்தியூர் ஆட்டையாம்பட்டி, சேலம்.
2) திரு N.S. ராஜேஷ் குமார், த/பெ. சிவராமன், உதவி மேலாளர் (சில்லறை விற்பனை) TASMAC, சித்தியூர் ஆட்டையாம்பட்டி, சேலம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
தாமதம் இல்லை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
(முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

விபரம் தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed S. சிந்தாமணி... Rank ADSP. to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ....................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14/11/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 14.11.2020 11.00 hrs.

Name: பெயர் S. சிந்தாமணி.
Rank: நிலை ..................No. எண் ..........
கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோவை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.10/AC/2020 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 பிரிவு 7 (a) r/w 102 Cr.P.C ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12 ன் விபரம்.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:</u>

நேற்று 13.11.2020 ஆம் தேதி மாலை சுமார் 13.00 மணியளவில் நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, சேலம் மாவட்டம், சேலம் வட்டம், எஸ்.ஆட்டையாம்பட்டி அஞ்சல், சந்தியூர் கிராமம், கதவு எண்.2/92ல் இயங்கி வரும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மாவட்ட மேலாளர் / துணை ஆட்சியர் டாஸ்மாக் லிட்., சேலம் அவர்களின் அலுவலகம் மற்றும் குடோனில் முறையே பணிபுரிந்துவரும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அவர்களின் கட்டுப்பாட்டில் இயக்கிவரும் தமிழ்நாடு மாநில வாணிப கழகம் (டாஸ்மாக்) சில்லரை மதுபான விற்பனை கடைகளில் 2020 ஆம் வருடம் தீபாவளி பண்டிகையையொட்டி தீபாவளி மாமூல், பட்டாக மற்றும் ஸ்வீட் பாக்ஸ்கள் ஆகியவற்றை பெற்று வருவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் திடீர் சோதனை மேற்கொள்வதற்காக நான், அரசு சாட்சிகள், காவல் ஆய்வாளர்கள் மற்றும் போலீஸ் பார்ட்டியினருடன் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 14.15 மணியளவில் புறப்பட்டு 13.11.2020 ஆம் தேதி மாலை சுமார் 15.00 மணி முதல் 21.45 மணி வரை சேலம் மாவட்டம், சேலம் வட்டம், எஸ்.ஆட்டையாம்பட்டி அஞ்சல், சந்தியூர் கிராமம், கதவு எண்.2/92ல் இயங்கி வரும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மாவட்ட மேலாளர் / துணை ஆட்சியர் டாஸ்மாக் லிட்., சேலம் அவர்களின் அலுவலகத்தினை சோதனையிடப்பட்டது. மேற்படி சோதனையின்போது மேற்படி அலுவலகத்தின் சைக்கிள் ஷெட்டில் காம்பவுண்ட் சுவர் ஓரம் வைக்கப்பட்டிருந்த மரப்பெட்டிக்கு பின்புறம் கற்றையாக ரூபாய் நோட்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. சோதனை குழுவினர் அந்த ரூபாய் நோட்டுகளை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் 12 இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகள், 30 ஐநூறு ரூபாய் நோட்டுகள் ஆக மொத்தம் ரூ.39,000/– இருந்தது. அந்த தொகையை யார் அங்கு மறைத்து வைத்துள்ளது என்று சோதனைக் குழுவினர் கேட்டபோது தொழிலாளர்கள் யாரும் பதில் சொல்லவில்லை. எனவே அந்த தொகை திடீர் சோதனைக் குழுவினரால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன்பின்பு

சோதனைக்குழுவினரின் சோதனையின்போது சைக்கிள் ஸ்டேண்டினை ஒட்டி தெற்கு பக்கம் உள்ள தென்னை மரத்திற்கு அடியில் ஒரு விளக்குமாற்றிக்கு கீழே ரூபாய் நோட்டுகள் ஒரு கற்றையாக மடித்து வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. சோதனை குழுவினர் அந்த ரூபாய் நோட்டுகளை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் 11 இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகள், 44 ஐநூறு ரூபாய் நோட்டுகள் ஆக மொத்தம் ரூ.44,000/– இருந்தது. அந்த தொகையை யார் அங்கு மறைத்து வைத்துள்ளது என்று சோதனைக் குழுவினர் கேட்டபோது தொழிலாளர்கள் யாரும் அதற்கும் பதில் சொல்லவில்லை. எனவே அந்த தொகையும் திடீர் சோதனைக் குழுவினரால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன்பின்பு சோதனைக்குழுவினர் மேற்படி தென்னை மரத்திற்கும் தெற்கு பக்கம் உள்ள மேல்நிலைத் தொட்டிக்கு செல்லும் இரும்பு படிக்கட்டுகளின் அருகில் சோதனை செய்தபோது அங்கும் ரூபாய் நோட்டுகள் ஒரு கற்றையாக மடித்து மறைத்து வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. அதன் அருகில் ஒரு அரை குயர் நோட் ஒன்றும் கிடந்தது. அந்த ரூபாய் நோட்டுகளை சோதனை குழுவினர் எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் 74 ஐநூறு ரூபாய் நோட்டுகள், 5 இருநூறு ரூபாய் நோட்டுகள், 2 நூறு ரூபாய் நோட்டுகள் ஆக மொத்தம் ரூ.38,200/– இருந்தது. அந்த தொகையை யார் அங்கு மறைத்து வைத்துள்ளது என்று சோதனைக் குழுவினர் கேட்டபோது தொழிலாளர்கள் யாரும் அதற்கும் பதில் சொல்லவில்லை. எனவே அந்த தொகையும் திடீர் சோதனைக் குழுவினரால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி தொகை இருந்த இடத்திற்கு அருகில் இருந்த அரை குயர் நோட்டினை எடுத்து பார்வையிட்டபோது அதில் Platinum Digital Spiderman என்று பெயர் பொறிக்கப்பட்ட ஸ்பைடர் மேன் படமும், கார் படமும் முன் பக்க அட்டையிலும், பின் பக்க அட்டையிலும் போடப்பட்டிருந்த அந்த நோட்டும், மேற்படி குடோனில் மேஸ்திரியாக வேலை செய்து வரும் திரு.சிவக்குமார் அவர்கள் வைத்திருந்த மேற்படி குடோனில் தினக்கூலிகளாக பணிக்கு வரும் தொழிலாளர்கள் வேலைக்கு வரும்போது எத்தனை மணிக்கு வந்தார்கள் என்ற விபரங்களை பதிவு செய்யும் பதிவேடு மற்றும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மாவட்ட மேலாளர் / துணை ஆட்சியர் டாஸ்மாக் லிட்., சேலம் அவர்களின் அலுவலக 2020 ஆம் வருட வருகைப் பதிவேடு ஆகியவைகள் விசாரணைக்காக கைப்பபற்றப்பட்டது. இந்த

சோதனையின்போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.1,21,200/–, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. மேற்படி நடவடிக்கையின்படியும் இதர ஆவணங்களைப் பரிசீலித்தும் மேற்கண்ட எதிரிகள் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மாவட்ட மேலாளர் / துணை ஆட்சியர் திரு.அம்பாயிரநாதன் மற்றும் உதவி மேலாளர் (சில்லறை விற்பனை) திரு.ராஜேஷ்குமார் அவர்கள் அரசுப் பணி செய்வதற்காக கையூட்டு பெறுவது தெரிய வருவதால் மேற்படி எதிரிகள் Sec. 7 (a) of Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 102 Cr.P.C ன்படி குற்றம் புரிந்துள்ளனர் எனத் தெரிகிறது.

எனவே மேற்கண்ட எதிரிகள் மீது குற்ற வழக்கு பதிய அனுமதி வேண்டி காவல் கண்காணிப்பாளர், மேற்கு சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களிடம் வாய்மொழியான அனுமதி பெறப்பட்டு அதன்பேரில் சேலம் ஊ.த.க. பிரிவு குற்ற எண்.10/AC/2020 u/s 7 (a) of Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 102 Cr.P.C ன்படி காலை 10.00 மணிக்கு வழக்குப் பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கையின் அசலினையும், 14.11.2020ஆம் தேதியிட்ட நடவடிக்கை குறிப்பையும் (Proceedings), நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,21,200/– ஆகியவற்றை கனம் தனிநீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகள் விசாரணை நீதிமன்றம், சேலம் அவர்களுக்கு அனுப்பியும், அதன் ஒரு நகலினை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பியும் இந்த வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

14/11/2020

கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சேலம்.